In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.11/2021 | Prosecution witness P.W.1 |
| Name: Karpagam | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.08.2023

**(Accused is present. )**

முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரத்தில் குடியிருக்கிறேன். சம்பவத்தில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் கணவர். ஆஜர் எதிரி சங்கிலியை தெரியும். என் கணவருக்கும் எனக்கும் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. எங்களுக்கு 2 ஆண் குழந்தைகள் இருக்கிறார்கள். 17.5.2020 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் எனது கணவரின் அண்ணன் அழகர்சாமி என்பவர் முத்துலாபுரம் ஊர்சாவடி அருகே இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது எதிரி சங்கிலி அழகர்சாமியை பார்த்து தேவடியா மகனே, அவிசாரி மகனே ஏண்டா இவ்வளவு வேகமா வண்டியில் வார என சத்தம் போட்டார். அதற்கு என் மாமா அழகர்சாமி நான் மெதுவாகத்தானே வருகிறேன், வேகமாக வரவில்லையே என்று சொன்னார். என் மாமா அழகர்சாமி வத்தலக்குண்டில் இருந்த முத்துலாபுரம் நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்து வந்துகொண்டிருந்தார். அவ்வாறு வரும்போது முத்துலாபுரம் சாவடி அருகே நின்று கொண்டிருந்த எதிரி சங்கிலி என் மாமா அழகர்சாமியை பார்த்து மேற்சொன்னவாறு சத்தம் போட்டார். என் மாமா மெதுவாகத்தானே வருகிறேன் என்று சொன்னதற்கு எதிரி சங்கிரி என் மாமா அழகர்சாமியை பார்த்து அவரது அம்மாவை தரக்குறைவாக பேசி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என சொன்னார். என் மாமா அழகர்சாமி எங்கள்

வீட்டிற்கு வந்து மேற்படி நடந்த விவரத்தை என் கணவர் கிருஷ்ணமூர்த்தி, என் மாமனார் ராமர், கொழுந்தனார் அலெக்ஸ் ஆகியோர்களிடமும் சொன்னார். வீட்டில் வந்து சொன்னவுடன் அன்றைய தினம் பகல் 2.45 மணிக்கு நானும், என் கணவர், என் மாமனார், என் கொழுந்தனார், அழகர்சாமி ஆகியோர் சங்கிலி வீட்டிற்கு சென்று எதற்கு தேவையில்லாமல் தரக்குறைவாக என் மாமியாரை பேசுகிறீர்கள் என்று கேட்டோம். தேவிடியா மகனே என்று என் கணவர் கிருஷ்ணமூர்த்தியை பார்த்து இங்கு எதற்குடா வந்தே, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி எதிரி சங்கிலி வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்துக்கொண்டு வந்து என் கணவரின் இடது மார்பில் குத்தினார். பின்னர் இன்னும் சாகவில்லையா என்று சொல்லி இடது மார்புக்கு கீழே ஒரு குத்து குத்தினார். நாங்கள் எதார்த்தமாக பேசிக்கொண்டு இருக்கிறோம் என்று நினைத்து இருந்தபோது எதிரி கத்தியை எடுத்து வந்து குத்திவிட்டார். அப்போது எங்கள் ஊரைச்சேர்ந்த வினோத் என்பவர் அந்த இருந்தார். காயம்பட்ட என் கணவரை உடனடியாக வினோத்தும், என் கொழுந்தன் அலெக்சும் வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு பைக்கில் கூட்டிச் சென்றார்கள். மருத்துவமனையில் மருத்துவர் பார்த்துவிட்டு என் கணவர் இறந்துவிட்டதாக கூறினார். நானும் என் மாமனார் ராமரும் பட்டிவீரன்பட்டி காவல் நிலையத்திற்கு மாலை 6 மணிக்குச் சென்று நடந்த சம்பவத்திற்கு புகார் கொடுத்தோம். நான் கொடுத்த புகாரில் என் மாமனார் ராமரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் அதசாஆ.1. நாங்கள் முதலில் வத்தலக்குண்டு மருத்துவமனை சென்று என் கணவர் இறந்த விவரத்தை அறிந்துவிட்டு பின்னர் பட்டிவீரன்பட்டி காவல் நிலையத்திற்கு பஸ்ஸில் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் கத்தியை வைத்துத்தான் எதிரி என் கணவரை குத்தினார். அந்த கத்தி சாபொ.1. மறுநாள் 18.5.2020 ம்

தேதி என் கணவரது பிரேதத்தை வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்து எங்களிடம் கொடுத்தார்கள். பட்டிவீரன்பட்டி காவல் நிலைய போலீசார் அன்றய தினம் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.28 17:53:53 +0530

Principal District Judge,
Dindigul.